செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்
08.2020 அன்று முற்பகல் 11.30 மணிக்கு
நடைபெற்றதன் கீழ்கண்ட நடவடிக்கைகள்.

தலைமை திரு. ந. கோ. கண்ணன் ம.க.,
தனி அலுவலர் அவர்கள்.

மன்றப்பொருள்..

செங்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள அரசாணை எண். 101–ன் படி, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவன துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்த ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 68 துப்புரவு பணியாளர்கள் நீங்கலாக கூடுதலாக 26 துப்புரவு பணியாளர்களை நியமித்துக் கொள்ள ந.க.எண். K.Dis எண். 28369/ஜே3/2018 நாள். 04.12.2018ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி உத்திரவின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, இராஜபாளையம் ஏ.வி.எம் சர்வீஸ் பாயிண்ட் நிறுவனத்தின் பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள இவ்வலுவலக செ.மு.ஆணை எண். 1281/2018/எச்1, நாள். 05.03.2019ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. ஆனால் அப்போது மைக்ரோ கம்போஸ்ட் திட்டப்பணிகள் முடிவடையாத நிலையில் மேற்படி பணி உத்திரவில் தேவைப்படும் பணியாளர்கள் குறித்த விபரம் தெரிவித்த பின்னர் கூடுதல் துப்புரவு பணியாளர்களை பணிக்கு அனுப்பும் படியும் அவ்வாறு அனுப்பப்படும் நாளிலிருந்து ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. 05.09.2019 முதல் இரண்டு நுண் உரக்குடில்கள் பணி முடிவடைந்து ஒப்பந்தக்காரருக்கு 14 துப்புரவு பணியாளர்கள் மட்டும் பணியில் ஈடுபடுத்த தெரிவிக்கப்பட்டது. தற்போது 04.09.2020 உடன் ஒரு வருடம் முடிவடைய உள்ளதாலும், ஒப்பந்த நிறுவனம் ஏ.வி.எம்.சர்வீஸ் பாயிண்ட் தனது கடிதத்தில், பழைய ஒப்பந்தப்புள்ளி விலை நிரக்கில் மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளதாலும், மேலும் ஒரு வருடத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட விலைநிரக்கில் துப்புரவு பணியினை ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள்..

தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 25.08.2020 ந் தேதிய கொரோனா தொற்று பரவல் தடுப்பு ஆய்வுக் கூட்டத்தில், செங்கோட்டை நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று பாதிப்பு அதிகமாக ஏற்பட்டு வருவதால், சளி மாதிரி பரிசோதனையை கூடுதலாக எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், தினசரி வீடு வீடாக சென்று காய்ச்சல் கணக்கெடுக்கும் பணியினை நகரில் உள்ள வயதான மக்களுக்கு அவர்களின் உடலின் வெப்பநிலை மற்றும் Pulse Oximeter மூலம் இரத்தத்தில் பிராண வாயுவின் அளவினையும் பரிசோதனை செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், மேற்படி பணியினை ஏற்கனவே உள்ள 20 டெங்கு நோய் தடுப்பு பணியாளர்கள் செய்ய இயலாத காரணத்தால் கூடுதலாக 10 டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியாளர்களை உடனடியாக நியமிக்கவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே, ஏற்கனவே 20 டெங்கு நோய் தடுப்பு

பணியாளர்களுடன் கூடுதலாக 10 பணியாளர்களை நியமிக்கவும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு..

1. தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடி அறிவுரையை மன்றம் பதிவு செய்யலாம்.
2. ஏற்கனவே உள்ள 20 டெங்கு க்காய்ச்சல் தடுப்பு பணியாளர்களுடன் கூடுதலாக 10 பணியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள்..

செங்கோட்டை நகராட்சி வல்லம் சாலையில் IUDM திட்டத்தின் கீழ் ரூ.260.00 லட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. மேற்கண்ட பணி மேற்கொள்ளும் போது திட்ட ஆலோசகர் மற்றும மண்டல செயற்பொறியாளர் அவர்களின் ஆலோசனைப்படி கீழ்க்கண்டவாறு மதிப்பீட்டில் வகை செய்யப்படாத பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

1. SDB – Roof சாதாரண கூரைக்கு பதிலாக FRP Sheet Roofing
2. Horizontal Gravel Filter – அடிதளம் கான்கீரிட் PCC 1:2:4 க்கு பதிலாக M.30 Concrete அமைக்கப்பட்டது.
3. Polishing Pond – Side wall – Precast Slab_ற்கு பதிலாக M.30 Concrete அமைக்கப்பட்டது. மேலும், sledge Drying Bed அமைக்கும் பணியில் மதிப்பீட்டில் வகைசெய்யப்படாத Fire Hose மற்றும் 36 எண்ணங்கள் S.S.COLLER பொருத்தவும் அறிவுறுத்தப்பட்டது. மேற்காணும் வ.எண்.1 முதல் 3 வரை உள்ள பணிகள் செய்யப்பட்டதால் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட குடிநீர் வசதி மற்றும் மின் விளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ள இயலவில்லை. எனவே, குடிநீர் வசதி மின்விளக்குகள் அமைக்கும் பணி, Fire Hose & COLLER அமைக்கும் பணி மேற்கொள்ளவும் ரூ. 9.00 லட்சத்திற்கு தயார் செய்த மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு..

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளலாம்.